**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: S.T.C. 393/2021**
**Deposition of witness for prosecution -PW-1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சவரிமுத்து |
| Father Name | : | திரு. ஜெபமாலை |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | மருந்து வியாபாரம் |
| Religion | : | கிறித்தவர் |
| Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 07th day of November 2022.

முதல் விசாரணை :-

நான் இந்த வழக்கின் புகார்தாரர் ஆவேன். எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளேன். அதில் முதல் விசாரணைக்காக போடப்பட்டது. அதன் அடிப்படையில் நான் ஒரு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொண்டு எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யவும், எதிரியின் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

<u>எனது தரப்பு ஆவணங்கள்:-</u>

1. 20.07.2021 தேதியிட்ட Bullion Fintech LLP வழங்கிய கடிதத்தின் அசல் ம.த.சா.ஆ. 1 ஆகும்.

2. 20.07.2021 தேதியிட்ட இந்துஸ்தான் வங்கி காசோலை அசல் ம.த.சா.ஆ.2 ஆகும்.

3. 21.07.2021 தேதியிட்ட ரிட்டன் மெமோ அசல் ம.த.சா.ஆ.3 ஆகும்.

4. 04.08.2021 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் ம.த.சா.ஆ.4 ஆகும்.

5. 04.08.2021 தேதியிட்ட எதிரிகள் நிறுவனம் பதிவு செய்யப்பட்டதற்கான ஆவணத்தின் நகல் ம.த.சா.ஆ.5 ஆகும்.

6. 04.08.2021ம் தேதி 1ம் எதிரிக்கு அனுப்பிய அறி விப்பு திருப்பப்பட்டதற்கான கவர் ம.த.சா.ஆ.6 ஆகும்.

7. 07.08.2021ம் தேதியிட்ட 2ம் எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை ம.த.சா.ஆ.7 ஆகும்.

8. 16.08.2021ம் தேதியிட்ட எதிரிகளால் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு ம.த.சா.ஆ.8 ஆகும்.

9. 16.08.2021ம் தேதியிட்ட எதிரிகள் பற்றிய பேப்பர் விளம்பரத்தின் நகல் ம.த.சா.ஆ.9 ஆகும்.

10. 09.06.2020ம் தேதி எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல் ம.த.சா.ஆ.10 ஆகும்.

(மனுதாரர் தரப்பு சான்றாவணம் 5, 9, 10 ஆகியவைகள் நகல் என்ற ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது. )

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்